**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– மனவளர்ச்சி குன்றிய 14 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப் பெறும் நான்கு இல்லங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், ஐ. இ. எல். சி மனவளர்ச்சி குன்றியோருக்கான மறுவாழ்வு இல்லம், பேரணாம்பட்டு, வேலூர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியினை இரத்து செய்து பெத்தேல் தொண்டு நிறுவனத்திற்கு அனுமதி வழங்கி– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.63

நாள்:08–09–2016
துன்முகி, ஆவணி 23,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. அரசாணை(1டி) எண்.28, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 03–03–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.கஎண்.3466/மா.தி.ந.2.1/2015, நாள் 13.06.2016.

------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2015–16 ஆம் ஆண்டில் 14 வயதுக்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கென தன்னார்வ தொண்டுகளால் நடத்தப்படும் நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு, ஒரு இல்லத்திற்கு ரூ.8,76,300/– வீதம் நான்கு இல்லங்களுக்கு ரூ.35,05,200/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதகாப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2015–16 ஆம் ஆண்டில் 14 வயதுக்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கென தன்னார்வ தொண்டுகளால் நடத்தப்படும் நான்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு, நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் மனவளர்ச்சி கன்றிய 14 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான இல்லத்தினை செயல்படுத்திட பேரணாம்பட்டு ஐ.இ.எல்.சி மனவளர்ச்சி குறையுடையோருக்கான நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு இல்லம் செயல்பாட்டில் இருந்து வருகிறது என்றும், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், வேலூர் மாவட்டத்தில் தகுதி வாய்ந்த தொண்டு நிறுவனங்களில் பெத்தேல் நிறுவனம் மட்டுமே மனவளர்ச்சி குன்றியோருக்கான பெண்களுக்கான இல்லத்தினை நடத்திட விருப்பம் தெரிவித்துள்ளதால், ஐ.இ.எல்.சி மனவளர்ச்சி குன்றியோருக்கான நிறுவனத்தினை மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான இல்ல செயலாக்கத்திலிருந்து விடுவித்து, பெத்தேல் தொண்டு நிறுவனத்திற்கு செயலாக்க பொறுப்பினை ஒப்படைத்திடலாம் என பரிந்துரைத்துள்ளார் என்றும், வேலூர் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்பட்டுள்ள பெத்தேல் நிறுவனத்தின் கருத்துரு பெறப்பட்டு கவனமாக பரிசீலிக்கப்பட்டு 01.07.2016 முதல் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான இல்லத்தினை செயல்படுத்திடும் பொறுப்பினை வேலூர் மாவட்டம், பெத்தேல் தொண்டு

நிறுவனத்திடம் நிபந்தனைகளுக்குப்பட்டு ஒப்படைத்திடலாம் என பரிந்துரைத்து உரிய அனுமதி ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலினை செய்த அரசு அதனை ஏற்று, மனவளர்ச்சி குன்றிய 14 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப் பெறும் நான்கு இல்லங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், ஐ. இ. எல். சி மானவளர்ச்சி குன்றியோருக்கான மறுவாழ்வு இல்லம், பேரணாம்பட்டு, வேலூர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியினை இரத்து செய்து வேலூர் மாவட்டம் பெத்தேல் தொண்டு நிறுவனத்திற்கு கீழ்காணும் நிபந்தனைகளின்படி அரசின் நிதியுதவியுடன் செயல்படக்கூடிய தொண்டு நிறுவனமாக அங்கீகரித்து அரசு ஆணையிடுகிறது.

i. ஐ.இ.எல்.சி தொண்டு நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வந்த பயனாளிகள்/ உள்ளுறைவாளர்கள் தொடர்ந்து பராமரிக்கப்படல் வேண்டும்.

ii. உள்ளுறைவாளர்களின் மொத்த எண்ணிக்கை 30க்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

iii. திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் கண்டிப்பாக நியமன செய்திடல் வேண்டும்.

iv. “பெத்தேல்” மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான 14 வயதிற்கு மேற்பட்ட தொழிற் பயிற்சியுடன் கூடிய மறுவாழ்வு இல்லம் எனும் பெயரில் கதவு எண்.28, தாயுமானவர் சாலை, திருநகர், வேலூர், வேலூர் மாவட்டம் எனும் முகவரியில் இயங்கி வருதல் வேண்டும்.

4. இத்தொண்டு நிறுவனம் சரியாக செயல்படாதபட்சத்தில் நீக்கும் பொழுது அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம்.
வேலூர் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)
**நகல்:–**
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.